மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 28 செவ்வாய்க்கிழமை 14.10.2025 கதிர் 339

யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# இலங்கையை உலுக்கிய துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்: சூத்திரதாரி இஷாரா செவ்வந்தி நேபாளத்தில் கைது!

கொழும்பு, ஒக். 14

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றக்குள் பாதாள உலகக் குழு உறுப்பினர் கனேமுல்ல சஞ்சீவ சுட்டுக்கொலை செய்யப்பட்டமை தொடர்பில் தேடப்பட்டு வந்த சூத்திரதாரி இஷாரா செவ்வந்தி நேபாளத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவருடன் மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஐவரையும் இலங்கைக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் நேபாள பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட தேடுதலின் போது இஷாரா செவ்வந்தி உள்ளிட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள்

7➤

# சஜித் அணியுடன் கூட்டுப் பயணம்: ரணிலின் கட்சி நாளை முக்கிய முடிவு

## வஜிர அபேவர்தன தகவல்

கொழும்பு, ஒக். 14

“இந்த அரசு வீழ்ச்சியடைந்தால் நாட்டைப் பொறுப்பேற்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தயாராகவே உள்ளது. அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி என்பவற்றின் இணைந்த பயணம் தொடர்பில் நாளை புதன்கிழமை சாதகமானதொரு முடிவு எடுக்கப்படும்.” - என்று தவிசாளர் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதவாது:-

“பொய்யுரைக்கும் அரசியலை முடிவுக்கு கொண்டுவருவதற்கும், நாட்டுக்காக பொதுவானதொரு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கி செல்வதற்கும் நாட்டு மக்கள் முன்வந்துள்ளனர். 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் எட்டாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றபோது, தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு இணையுமாறு அழைப்பு விடுத்தார். இந்தத் திட்டத்துக்கு அப்பால் சென்று எதையும் செய்ய முடியாது. அவ்வாறு செய்ய முடியும் எனக் கூறுவது பொய்யாகும். அவ்வாறு பொய்யுரைத்தால் மக்கள் அவர்களை வீதியில் தாக்குதல் நிலை ஏற்படும்.

ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த தீர்மானம் பற்றி நாளை புதன்கிழமை நடைபெறும் ஐக்கிய தேசியக்கட்சியின் முகாமைத்துவக்குழு மற்றும் செயற்குழு கூட்டங்களில் ஆராயப்பட்டு, சாதகமான முடிவு எடுக்கப்படும்.

ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த பயணத்தை விட சிறப்பான பயணத்தை இந்த அரசால் முன்னெடுக்க முடியுமா? முடியாது என்பதே எனது கருத்தாகும். நாம் கொண்டு வந்த சட்ட திட்டங்கள் மீறப்பட்டு வருகின்றன. அப்படியானால் அரசின் வீழ்ச்சி ஆரம்பமாகின்றது. அவ்வாறான நிலை ஏற்பட்டால் நாட்டை ஐ.தே.க. பொறுப்பேற்கும். அது பற்றி குழப்பமடையத் தேவையில்லை.” - என்றார்.



# முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவாரா மரிக்கார்?



கொழும்பு, ஒக். 14

“நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்கே மக்கள் எனக்கு வாக்களித்தனர். மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்குவது பற்றி நான் சிந்தித்துக் கூட பார்க்கவில்லை. எனினும், கட்சி

7➤

# யாழ்ப்பாணத்தில் இரண்டாவது நாளாக தொடரும் ஆசிரியர்களின் போராட்டம்

## நேரில் சென்று பிரச்சினைகளைக் கேட்டறிந்த எம்.பிக்கள்

யாழ்ப்பாணம், ஒக். 14

ஆசிரியர் இடமாற்ற கொள்கையைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக கஷ்டப் பிரதேசம் மற்றும் அதி கஷ்டப் பிரதேசங்களில் பணிபுரிந்த ஆசிரியர்களுக்கான

7➤



# யாழ். நூலகத்தில் வெளிநாட்டு இராணுவ அதிகாரிகள்








யாழ்ப்பாணம், ஒக். 14

வெளிநாடுகள் பலவற்றின் இராணுவ அதிகாரிகள் பலர் இலங்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர்.

இவர்கள் இன்று காலை யாழ். பொது நூலகத்தைப் பார்வையிட்டனர்.

வெளிநாடுகள் பலவற்றின் இராணுவ அதிகாரிகள் பலர்

7➤



# மின்சாரக் கட்டணத்தில் மாற்றம் எதுவும் இல்லை

கொழும்பு, ஒக். 14

மின்சாரக் கட்டணத்தில் எந்தவித மாற்றங்களும் மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கொழும்பில் இன்று நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் அந்த ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கே.எல். சந்திரலால் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 6.8 சதவீதத்தால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை, இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு முன்மொழிவுகளை முன்வைத்திருந்தது.

இது தொடர்பில், தொடர்புடைய தரப்பினர்களிடம் அந்த ஆணைக்குழு கருத்துகளையும் ஆலோசனைகளையும் கோரியிருந்தன.

அவற்றைப்பரிசீலித்ததையடுத்து, மின்சாரக் கட்டணத்தில் எந்தவித மாற்றத்தையும் மேற்கொள்ளாது எதிர்வரும் 3 மாதங்களுக்கு தற்போதைய கட்டணத்தையே பேணிச் செல்வதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# மழையால் தாமதமடைந்துள்ள யாழ். செம்மணி அகழாய்வுப் பணிகள்!

கொழும்பு, ஒக் .14

யாழ். செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழாய்வுப்பணிகள் தொடர்ச்சியான மழையால் தாமதமடைந்துள்ளன.

யாழ். செம்மணி சித்துப்பாத்தி மனிதப்புதைகுழி தொடர்பிலான வழக்கு இன்றையதினம் (14) காலை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது அகழ்வு பணிக்காக பாதீடு மன்றில் சமர்ப்பிக்கப்பட்டு கோரப்பட்ட நிதியை, நீதி அமைச்சு விடுவித்துள்ளதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை ஆரம்பிப்பது தொடர்பில் புதைகுழி காணப்படும் பகுதிக்கு சென்று நேரில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என மன்றில் தெரிவிக்கப்பட்டு, நீதவான் உள்ளிட்ட குழுவினர் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி பகுதியைச் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் மழை காரணமாக புதைகுழி காணப்படும் இடத்தில் வெள்ள நீர் தேங்கி நிற்பதுடன், அப்பகுதிகள் சதுப்பு நிலமாகவும் காட்சியளித்தன.

இந்தநிலையில் தொடர்ச்சியாக மழை பெய்யுமானால், குறித்த இடத்தில் அகழாய்வுப் பணிகளை மேற்கொள்வது மிகவும் சிரமமானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்த வழக்கு மீண்டும் திறந்த நீதிமன்றத்தில் எதிர்வரும் நவம்பர் 3ம் திகதி எடுத்துக்கொள்ளப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா அவர்களால் புதைகுழி அகழாய்வுக்கு கோரப்பட்ட நிதி, நீதி அமைச்சால் அனுமதிக்கப்பட்டு அகழாய்வுப் பணியைத் தொடர்வதற்காக குறிப்பிட்ட தொகை அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பொருளாதாரம், அபிவிருத்தி குறித்து ரில்வினுடன் இந்தியத் தூதுவர் பேச்சு

கொழும்பு, ஒக். 14

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பொதுச்செயலாளர் ரில்வின் சில்வாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இந்தியா - இலங்கை பங்குடைமையின் அண்மைய முன்னேற்றங்கள் குறித்து அவர்கள் விரிவாக உரையாடினர்.

மேலும், இரு நாட்டு மக்களின் பரஸ்பர செழுமைக்காக நெருக்கமான பொருளாதார உறவுகளை ஏற்படுத்த வேண்டியதன் வரம்பற்ற ஆற்றல் குறித்தும், அதனை வலுப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் இருவரும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பு, எதிர்காலத்தில் இந்தியாவுக்கும் ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கும் (என்.பி.பி.) இடையிலான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதாக அமைந்துள்ளது.



# இலங்கையின் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு சீனா ஆதரவளிக்கத் தயார்– சீன ஜனாதிபதி!

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு சீனா ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்துள்ளார்.

பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மண்டபத்தில், இலங்கைப் பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் சீன ஜனாதிபதிகளுக்கிடையில் இன்று சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சீனாவும் இலங்கையும் நீண்டகால பாரம்பரிய நட்பைக் கொண்டுள்ள நிலையில், இரு நாடுகளும் அமைதி மற்றும் சகவாழ்வு என்ற ஐந்து அம்சக் கொள்கையின் அடிப்படையில் இருதரப்பு உறவுகளைத் தொடர்ந்தும் வளர்த்து வருகின்றன என்று ஜி ஜின்பிங் தெரிவித்தார்.

இது பல்வேறு நாடுகளுக்கு இடையே நட்புரீதியான நடத்தை மற்றும் பரஸ்பர நன்மை பயக்கும் ஒத்துழைப்புக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

அத்துடன் சீனா அண்டை நாடுகளுடனான தனது இராஜதந்திரத்தில் இலங்கைக்கு எப்போதும் முன்னுரிமை அளிக்கும் என்றும் சீன ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதில் சீனா ஆதரவளிக்கிறது.

துறைமுகப் பொருளாதாரம், நவீன விவசாயம், டிஜிட்டல் பொருளாதாரம், பசுமைப் பொருளாதாரம் மற்றும் சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை விரிவுபடுத்தவும் தயாராக உள்ளது.

இந்த வழியில் இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியை ஆதரிக்கவும், சட்ட அமலாக்கம், சர்வதேச தொலைத்தொடர்பு குற்றங்களை எதிர்த்துப் போராடுதல் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பலதரப்பு கட்டமைப்புகளில் ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தவும் சீனா நம்புகிறது என தெரிவித்திருந்தார்.

இங்கு பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய கருத்து தெரிவிக்கையில்,

பெண்கள் மீதான உலகளாவிய உச்சி மாநாட்டில் சி ஜின்பிங் வெளியிட்ட அறிக்கை ஆழமானது என பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

உலகளாவிய பெண்கள் இயக்கத்தை ஊக்குவிப்பதில் சீனா ஆற்றிய முக்கிய பங்கை இது பிரதிபலிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சீனாவுடனான தனது உறவுகளை மதிக்கும் இலங்கை, ஒரே சீனா கொள்கையை கண்டிப்பாக கடைபிடிப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு சீனா வழங்கும் மதிப்புமிக்க ஆதரவுக்கு நன்றி தெரிவித்த அவர், சீன பாணி நவீனமயமாக்கல் அனுபவத்தைப் படிப்பதன் மூலமும், சீனாவுடனான ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துவதன் மூலமும் தனது நாட்டில்

ஒரு புதிய வளர்ச்சியை அடைய விரும்புவதாகக் கூறினார்.

தற்போதைய பதற்றமான சர்வதேச சூழ்நிலையை அமைதிப்படுத்த சி ஜின்பிங் முன்வைத்த நான்கு உலகளாவிய முயற்சிகள்

முக்கியமானவை என்றும், அந்த முயற்சிகளை செயல்படுத்தவும், உலகளாவிய தெற்கில் பொதுவான ஆதாயங்களை உறுதி

செய்யவும் இலங்கை சீனாவுடன் இணைந்து செயல்படும்– என்றும் பிரதமர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சஷீந்திர ராஜபக்ஷவுக்குப் பிணை

கொழும்பு, ஒக். 14

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை உத்தர விட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல – கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரசாங்க நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ நுகேகொடை பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கடந்த ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி காலை கைது செய்யப்பட்டிருந்தார்.

அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## சங்குபிட்டி பாலத்தில் மீட்கப்பட்ட பெண்ணின் சடலம்– அடுத்தடுத்து வெளியாகும் அதிர்ச்சி தகவல்கள்!

யாழ்ப்பாணம் பூநகரி, சங்குபிட்டி பாலத்தில் நேற்று முன்தினம் (12) பெண்ணின் சடலம் ஒன்று கரையொதுங்கியிருந்தது.

18 முதல் 22 வயதிற்குட்பட்ட பெண்ணின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியிருந்ததாக் கூறப்பட்டது

எனினும் யாழ்ப்பாணம் காரைநகர் பகுதியைச் சேர்ந்த, 36 வயதுடைய இரு குழந்தைகளின் தாயாரே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த பெண்ணின் சடலம் நேற்று (13) யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உடற்கூறாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இதன்போது மீட்கப்பட்ட பெண்ணின் சடலம் தொடர்பில் அதிர்ச்சியான தகவல்கள் வெளியாகியுள்ளது.

குறித்த பெண்ணின் முகம் எரிக்கப்பட்ட நிலையில் சடலமாக மிதந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் குறித்த பெண் பலரால் கொடூரமாக கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்படது.

எனினும் உடற்கூற்று பரிசோதனையின் போது அந்தப் பெண் படுகொலை செய்யப்பட்டது வெளியாகியுள்ளது.

குறித்த பெண்ணின் தலையில் குத்தப்பட்டு, முகம் உள்ளிட்ட உடல் பகுதிகளில் எரியக்கூடிய திரவம் ஊற்றப்பட்டு எரிக்கப்பட்டு, கடலில் வீசப்பட்டுள்ளார். அவரது நுரையீரலில் நீர் புகுந்து, மூச்சுத்திணறல் ஏற்பட்டமையால் உயிரிழந்துள்ளார் என உடற்கூறாய்வில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த பெண் வீட்டை விட்டு புறப்படும்போது 10 பவுண் நகை அணிந்திருந்தார் என கூறப்பட்ட போதிலும், அவரது சடலத்தில் நகைகள் காணப்படவில்லை என விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன் குறித்த பெண் வீட்டை விட்டு புறப்படும்போது, தனது நண்பியுடன் வவுனியா செல்வதாகக் கூறியிருந்தார். எனினும் இதுவரை நடத்தப்பட்ட விசாரணையின்படி, அந்தப் பெண் தனது கணவரிடம் கூறிய நபர்களுடன் சென்றதாகத் தெரியவில்லை.

அந்தப் பெண் பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளானதாகச் செய்திகள் வெளியான போதும், உடற்கூறாய்வில் அது உறுதிப்படுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சம்பவம் தொடர்பில் விரைவில் குற்றவாளிகள் கைது செய்யப்படுவார்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மோட்டார் போக்குவரத்து திணைக்களம் வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பு!

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பணிகள் எவ்வித தடையுமின்றி இடம்பெற்று வருவதாக அத்திணைக்களம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக சில அரச நிறுவனங்களின் பணிகள் கடந்த தினம் தடைப்பட்டதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து, மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் பணிகளும் தடைப்பட்டுள்ளதாக சில தரப்பினர் போலியான தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக தரகர்கள் இந்த சேவைகள் தடைப்பட்டுள்ளதாக கூறி மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் சேவை பெறுவோரை தேவையற்ற அழுத்தங்களுக்கு உள்ளாக்கி வருவதாக தற்போது செய்திகள் கிடைத்துள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் நாரஹேன்பிட்டியில் உள்ள பிரதான அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் புதிய வாகனப் பதிவு மற்றும் வாகனப் பரிமாற்றப் பணிகள் எவ்விதத் தடையுமின்றி நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வேரஹெர சாரதி அனுமதிப்பத்திரப் பிரிவின் பணிகள் மற்றும் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஏனைய அனைத்து மாவட்ட அலுவலகங்களின் பணிகளும் தற்போது எவ்விதத் தடையுமின்றி நடைபெற்று வருவதாகவும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே இது குறித்து விசேட கவனம் செலுத்துமாறும், தரகர்கள் உள்ளிட்டவர்களின் போலியான தகவல்களுக்கு ஏமாறாமல் செயற்படுமாறும் அத்திணைக்களம் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரக் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இல்லை– வெளியான அறிவித்தல்!

கொழும்பு, ஒக் .14

2025 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் பாதிக்கான மின்சாரக் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்பட மாட்டாது என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று (14) நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அடுத்த மூன்று மாதங்களுக்கு தற்போதுள்ள மின்சாரக் கட்டணத்தில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்று ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் கே.பி.எல். சந்திரலால் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் விசேட ஊடக சந்திப்பில் பங்கேற்று கருத்து தெஹிவிக்கும் போதே அவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இலங்கை மின்சார சபையானது 2025 ஆம் ஆண்டின் மூன்றாவது மின்சார கட்டண திருத்தத்திற்காக, மின்சார கட்டணத்தை 6.8 சதவீதம் உயர்த்துமாறு இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதன்படி மின்சார கட்டண திருத்தம் தொடர்பாக பொதுமக்களின் கருத்துக்களும் பரிந்துரைகளும் கோரப்பட்ட நிலையில், அந்த செயல்முறை ஒக்டோபர் 8ஆம் திகதி நிறைவடைந்தது.

மின்சார கட்டண திருத்தம் தொடர்பில் பொது பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்ததாவது,

மின்சார சபை மற்ற செலவுகளுடன் சேர்த்து 6.8மூ க்கும் அதிகமான கட்டண உயர்வை எதிர்பார்த்தது.

முந்தைய காலகட்டங்களுடன் தொடர்புடைய சில வகையான சரிசெய்தல்கள் செய்யப்பட வேண்டும் என்பது எங்கள் யோசனையாக இருந்தது. இதை நாங்கள் வருமான வேறுபாடு சரிசெய்தல் **(revenue adjustment)** என அழைக்கிறோம்.

கடந்த காலத்தில் மின்சார கட்டணங்கள் 06 மாதங்களுக்கு ஒருமுறை முடிவு செய்யப்பட்டன. ஆனால், இப்போது காலாண்டு அடிப்படையில் முடிவுகள் எடுக்கப்பட வேண்டியிருந்தது. கடந்த மூன்று காலாண்டுகளுக்கான இலாபம் சரிசெய்தல் செய்யப்பட வேண்டும். ஆனால், மூன்று காலாண்டுகளின் சரிசெய்தலை ஒரே நேரத்தில் செய்வது பொருத்தமற்றது என ஆணைக்குழு முடிவு செய்தது.

# ஐ.பி.எஸ் அதிகாரி தற்கொலை விவகாரம் கட்டாய விடுப்பில் பொலிஸ் டிஜிபி அனுப்பி வைப்பு: பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்த ராகுல்



ஐ.பி.எஸ். அதிகாரி தற்கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட அரியானா டி.ஜி.பி. சத்ருஜீத் கபூர், கடும் நெருக்கடி காரணமாகக் கட்டாய விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளார். அரியானாவைச் சேர்ந்த ஐ.பி.எஸ். அதிகாரியான ஒய். பூரன் குமார், கடந்த 7ம் தேதி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் பெரும் புயலைக் கிளப்பியுள்ளது. தற்கொலைக்கு முன்பாக அவர் எழுதி வைத்ததாகக் கூறப்படும் 8 பக்க கடிதத்தில், மாநில டி.ஜி.பி. சத்ருஜீத் கபூர், முன்னாள் ரோதக் எஸ்.பி. நரேந்திர பிஜார்னியா உள்ளிட்ட 8 உயரதிகாரிகள்மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தார்.

'ஜாதி ரீதியான பாகுபாடு, மன உளைச்சல் மற்றும் அவமானப்படுத்துதல் போன்ற தொடர் துன்புறுத்தல்களே' தனது கணவரின் தற்கொலைக்குக் காரணம் என பூரன் குமாரின் மனைவியும், மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியுமான அம்னீத் பி. குமார் குற்றம்சாட்டினார். மேலும், குற்றம்சாட்டப்பட்ட டி.ஜி.பி. கபூர் மற்றும் பிஜார்னியாவை உடனடியாகப் பதவியில் இருந்து நீக்கிக் கைது செய்யும் வரை, பிரேத பரிசோதனை செய்யவோ, உடலைத் தகனம் செய்யவோ அனுமதிக்க மாட்டோம் என அவரது குடும்பத்தினர் திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்கள் பூரன் குமாரின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியதுடன், தலித் அமைப்புகளும் அரசுக்குக் கடும் கண்டனம் தெரிவித்தன.

இந்த விவகாரம் மாநிலம் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய நிலையில், குடும்பத்தினர் மற்றும் எதிர்க்கட்சிகளின் தொடர் அழுத்தத்தைத் தொடர்ந்து, அரியானா டி.ஜி.பி. சத்ருஜீத் கபூர் தற்போது விடுப்பில் அனுப்பப்பட்டுள்ளார். முன்னதாக, மற்றொரு முக்கிய அதிகாரியான நரேந்திர பிஜார்னியாவும் விடுப்பில் அனுப்பப்பட்டிருந்தார்.

இந்த வழக்கை விசாரிக்க சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தற்கொலைக் கடிதத்தின் வரைவு பூரன் குமாரின் லேப்டாப்பில் இருந்ததாகக் கூறப்படுவதால், அதனைத் தடயவியல் ஆய்வுக்காக ஒப்படைக்குமாறு புலனாய்வாளர்கள் அவரது குடும்பத்தினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விவகாரத்தில் நியாயமான விசாரணைக்கு அரசு உறுதிபூண்டுள்ளதாகத் தெரிவித்திருந்தாலும், டி.ஜி.பி.யின் விடுப்பு தொடர்பான அதிகாரப்பூர்வ உத்தரவு உடனடியாக வெளியிடப்படவில்லை. (ஐ)

## போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட இந்து மகா சபா தலைவர் கோடம்பாக்கம் ஸ்ரீயை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவு!!



போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட இந்து மகா சபா தலைவர் கோடம்பாக்கம் ஸ்ரீயை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த 13 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்த வழக்கில் கோடம்பாக்கம் ஸ்ரீ கைது செய்யப்பட்டார். வீட்டில் பணியாற்றும் பெண்ணின் சகோதரர் மகளான 11ம் வகுப்பு படிக்கும் மாணவியை பாலியல் வன்கொடுமை செய்ததாக புகார் அளிக்கப்பட்டது. பாலியல் தொல்லை செய்த கோடம்பாக்கம் ஸ்ரீ, உடந்தையாக இருந்த சிறுமியின் அத்தை ஆகியோர் கைது செய்யப்பட்டனர். கோடம்பாக்கம் ஸ்ரீயை அக்டோபர் 28ம் தேதி வரை சிறையில் அடைக்க போக்சோ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ஐ)




## பொய் சொல்லி கையெழுத்து வாங்கி மனுதாரர்களாக சேர்த்தது யார் என விசாரிக்க வேண்டும்: அண்ணாமலை பேட்டி

திமுக பொருளாளர் டி.ஆர்.பாலு தொடர்ந்த அவதூறு வழக்கில், சென்னை சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை ஆஜரானார். தொடர்ந்து அவர் அளித்த பேட்டி: கரூரில் பாதிக்கப்பட்ட 41 குடும்பம், அதில் அவர்களுக்கு தெரியாமல் இரண்டு நபர்களிடம் பொய் சொல்லி கையெழுத்து வாங்கி அவர்களையும் இந்த வழக்கில் மனுதாரராக சேர்த்திருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து, அந்த 2 பேரிடம் பொய் சொல்லி யார் கையெழுத்து வாங்கினார்கள். அவர்களை யார் தவறாக வழிநடத்தியது என்று விசாரிக்க வேண்டும். சீமான் சிபிஐ விசாரிப்பது மாநில தன்னாட்சிக்கு எதிராக இருக்கிறது என்று ஏன் பதற்றப்படுகிறார் என தெரியவில்லை. எங்களை பொறுத்தவரை கரூரில் பாதிக்கப்பட்ட 41 குடும்பங்களுக்கும் நியாயம் கிடைக்க வேண்டும். இவ்வாறு அண்ணாமலை கூறினார். (ஐ)



## தீபாவளி பண்டிகையையொட்டி ஈரோடு ஜவுளி சந்தையில் ரூ.7 கோடிக்கு வர்த்தகம்

தீபாவளி பண்டிகையையொட்டி, ஈரோடு ஜவுளி வாரச்சந்தையில் ரூ.7 கோடி வரை வர்த்தகம் நடைபெற்றதால், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஈரோட்டில் வாரந்தோறும் திங்கட்கிழமை இரவு தொடங்கி செவ்வாய்க்கிழமை மாலை வரை ஜவுளி வாரச்சந்தை நடைபெறுவது வழக்கம். தென்னிந்திய அளவில் மிகவும் புகழ் பெற்ற இச்சந்தையில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தெலுங்கானா போன்ற பல்வேறு மாநிலங்களில் இருந்து நூற்றுக்கணக்கான வியாபாரிகள் மொத்த விலைக்கு துணிகளை கொள்முதல் செய்வது வழக்கம். தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஏராளமான சிறு,குறு வியாபாரிகள் வந்து துணிகளை கொள்முதல் செய்வார்கள்.

தீபாவளி பண்டிகையையொட்டி கடந்த சில வாரங்களாக ஜவுளி வார சந்தையில் வியாபாரம் விறுவிறுப்பாக நடந்து வந்தது. தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், வெளி மாநில வியாபாரிகள் அதிக அளவில் ஈரோடு ஜவுளி வார சந்தைக்கு வந்து துணிகளை கொள்முதல் செய்தனர். தீபாவளி பண்டிகைக்கு இன்னும் 6 நாட்களே உள்ள நிலையில் நேற்று இரவு ஜவுளி வாரச்சந்தை கூடியது. ஈரோடு பன்னீர்செல்வம் பார்க், ஈரோடு கிருஷ்ணா தியேட்டர் பகுதி, ஸ்டேட் பேங்க் ரோடு பகுதியில் நூற்றுக்கணக்கான வியாபாரிகள் கடைகளை அமைத்திருந்தனர்.

ஐ.பி.எஸ் அதிகாரி தற்கொலை விவகாரம் கட்டாய விடுப்பில் போலீஸ் டிஜிபி அனுப்பி வைப்பு: பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை சந்தித்த ராகுல்'

கேரளா, ஆந்திரா, மகாராஷ்ரா போன்ற பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த வெளி மாநில வியாபாரிகள் நூற்றுக்கணக்கானோர் துணிகளை மொத்தமாக கொள்முதல் செய்து வாங்கி சென்றனர். இதனால் மொத்த வியாபாரம் விறுவிறுப்பாக நடந்தது. தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியில் இருந்து வந்திருந்த சிறு,குறு வியாபாரிகளும் துணிகளை போட்டிப்போட்டு வாங்கி சென்றனர். வழக்கமாக சாதாரண நாட்களில் ஜவுளி வார சந்தையில் ரூ.5 கோடிக்கு வர்த்தகம் நடைபெறும் நிலையில், நேற்று இரவு முதல் இன்று காலை வரை ரூ.7 கோடி வரை வர்த்தகம் நடைபெற்றதாகவும், வியாபாரிகள் தெரிவித்தனர்.


இது குறித்து ஜவுளி வியாபாரிகள் கூறுகையில், "தீபாவளி சமயங்களில் ஜவுளி வார சந்தையில் வழக்கத்தைவிட வியாபாரம் விறுவிறுப்பாக இருக்கும். ஈரோடு ஜவுளி வார சந்தையில் கடந்த வாரம் முதலே தீபாவளி பண்டிகையை ஒட்டி வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வந்தது. மொத்த வியாபாரம் 50 சதவீதமும், சில்லறை வியாபாரம் 60 சதவீதம் நடைபெற்றது. குழந்தைகள் முதல் முதியவர்களுக்கு என்று தனித்தனியாக ரகங்களில் துணிகள் அதிக அளவில் வந்திருந்தன. அவை அனைத்தும் சிறிது நேரத்தில் விற்று தீர்ந்தது. (ஐ)

## திருச்செந்தூர் கோயிலில் விதிகள்படி அறங்காவலர் குழு உறுப்பினர்களை நியமிக்க ஐகோர்ட் கிளை உத்தரவு!!



திருச்செந்தூர் முருகன் கோயிலில் விதிகள்படி அறங்காவலர் குழு உறுப்பினர்களை நியமிக்க உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. அறங்காவலர் குழு தலைவரை நியமித்து ஓராண்டாகியும் உறுப்பினர்களை நியமிக்காதது ஏன் என நீதிபதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். மேலும், 4 மாதத்துக்குள் அறங்காவலர் குழு அமைக்காவிட்டால் நீதிமன்றமே உறுப்பினர்களை நியமிக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அறங்காவலர் குழு நியமனம் செய்யப்படாதது சட்ட விதிகளை அவமதிக்கும் செயல் என ஐகோர்ட் கிளை தெரிவித்துள்ளது. (ஐ)

# பிணவாடை!




-ஜா. கிறிஸ்டி பெமிலா

பானு முஷ்டாக்கின் 2025 ஆம் ஆண்டிற்கான புக்கர் விருதினைப் பெற்ற சிறுகதைத் தொகுப்பாகிய உநயசவ டுயஅி -இன் "குசைந சுயலை" என்கிற சிறுகதையை வாசித்தபோது ஏனோ 1997 இல் இதே பரிசை வென்ற அருந்ததி ராயின் தாயார் நினைவிற்கு வந்தார்.

அப்போது இந்தப் பரிசை மான் புக்கர் விருது என்றழைத்தனர். இந்த ஆண்டு அருந்ததி ராய் எழுதி வெளிவந்துள்ள ஆழவாநச ஆயசல ஊழஅநள வழ ஆந என்கிற நினைவுக்குறிப்பு நூல் அவருக்கும், அவருடைய தாயாராகிய காலஞ்சென்ற மேரி ராய்க்கும் இடையிலிருந்த சிக்கலான உறவை விவரிக்கிறது.

இந்நூல்சில சர்ச்சைகளைக்கிளப்பிக்கொண்டிருப்பது ஒருபுறமிருக்க, மேரி ராய் ஒரு சிறப்புமிக்க இந்திய கல்வியாளராகவும், பெண்ணுரிமைப் போராளியாவும் அறியப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் சமூக அந்தஸ்து பெற்ற பாரம்பரிய சிரியன் கிறிஸ்தவ சமுதாயத்தைச் சார்ந்தவராக இருந்தபோதும், வேற்று சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார்.


ஓர் இக்கட்டான சூழ்நிலையின் காரணமாக பூர்வீக சொத்தின் பங்கைப்பெறும் உரிமைக்காக தன் சகோதரர் மீது வழக்குத் தொடுக்கிறார். ஒரு பெண்ணாக தனது பெற்றோரின் சொத்தில் பங்கு கிடைப்பதற்கு 1916 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட திருவிதாங்கூர் வாரிசுரிமைச் சட்டம் தடையாக இருந்தது. இச்சட்டத்தினால் அவருக்கும், அவர் சார்ந்திருந்த சமுதாயத்தின் பெண்களுக்கும் குடும்ப சொத்தில் சம உரிமை மறுக்கப்பட்டிருந்தது. நீதிமன்றத்தில் வழக்கு பல நிலைகளில் விவாதிக்கப்பட்டு, இறுதியில் 1986 இல் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு அவருக்குச் சாதமாக வரவே குடும்ப சொத்தின் பங்கைப் பெற்றார். இதில் வேதனையான செய்தி என்னவென்றால், இந்தத் தீர்ப்பு எல்லா சிரியன் கிறஸ்தவ பெண்களின் சொத்துரிமையில் சமத்துவத்தைச் சட்டரீதியாக நிலைநாட்டியுள்ளது என்றபோதும், நடைமுறையில் அவர்களுடைய குமுகாயத்தில் இன்றளவும் சொத்து சமமாகப் பகிரப்படுவதில்லை. இனி சிறுகதைக்கு வருவோம்.

'குசைந சுயலை' சிறுகதையின் மைய கதாபாத்திரம் உஸ்மான் சாகிப் என்பவர். இவர் ஒரு முத்தவல்லியாக அவர்களுடைய வட்டாரத்தில் அந்தஸ்துள்ளவராக இருக்கிறார். மனைவியின் பெயர் ஆரிஃபா. சிறுவயது மகனுக்கு இரவு முழுக்க காய்ச்சலாக இருந்ததால் ஆரிஃபா அன்றிரவு தூங்காமல் அவனைப் பார்த்துக்கொண்டிருந்தார். இதனால், காலையில் உஸ்மான் சாகிப் எழுந்த பின்பும் அவள் ஆழ்ந்து உறங்கிக கொண்டிருந்தாள்.

'கோபப்படுவது பன்றிக்குச் சமமான அருவருப்பானது' என்று எல்லாருக்கும் அறிவுறுத்தத் தெரிந்திருந்த உஸ்மான் சாகிப், அந்த விதிமுறை தனக்குப் பொருந்தாது என்பது போல் அவள் மீது கோபப்படுகிறார்.

அதேபோல அவர் ஆசையாய் பார்த்து, பார்த்து திருமணம் செய்து வைத்த இளைய சகோதிரி, அன்றைய தினம் உஸ்மான் சாகிபிடமிருந்து சொத்தில் உரிமைக் கேட்டபோதும் கடுமையாக கோபப்படுகிறார். ஆரிஃபா கணவரிடம் நாத்தநாருக்காகப் பரிந்து பேசியது உஸ்மான் சாகிபின் காதுகளுக்கு எட்டவில்லை.

காலையில் வழக்கம்போல அவர் வீட்டிற்கு முன்பாக சிபாரிசிற்காகவும், பல்வேறு உதவிகள் பெறுவதற்காகவும் கூடியிருந்த கூட்டத்தில், அவரது மூத்த சகோதிரியும் வரிசையில் காத்திருக்கிறார். கைம்பெண்ணாகிவிட்ட அவளுக்குச் சுயமரியாதை இருந்தது. மகனுக்கு வேலை கிடைப்பதற்காக அண்ணனின் சிபாரிசிற்காக வந்திருந்த அவர் வீட்டிற்குள் வந்து உரிமையோடு உதவிக் கோட்காமல் பொதுமக்களைப்போல வீட்டிற்கு வெளியில் நின்றுக் கொண்டிருந்தார்.






இது இவ்வாறிருக்க, உஸ்மான் சாகிபின் உதவியாளர் தாவூத் அங்கு வந்து சேர்கிறார். கூடவே ஒரு செய்தியையும் கொண்டு வருகிறார். நிசார் என்னும் சாயம்பூசுகிற வேலை செய்யும் நபர் ஒன்றரை மாதத்திற்கு முன்பு குளத்தில் விழுந்து இறந்துவிட்டார் என்று சொன்னபோது குழுமியிருந்தவர்களிடையே சலசலப்பு எற்பட்டது. நிசாரை பொலிசார் இந்து மயானத்தில் அடக்கம் செய்துவிட்டனர் என்றபோது,

அனைவரும் குற்றவுணர்வுடன் பரிதாபப்பட்டனர். நிசார் எத்தனைப் பேரிடம் சாயம் அடித்துத் தருகிறேன் என்று பணத்தை வாங்கி ஏமாற்றியிருக்கிறார், அவர் சதா குடிபோதையிலிருக்கும் 'குடிமகன்' என்பதையெல்லாம் தாண்டி அந்தப் பாவப்பட்ட முஸ்லிமுக்குக் கபரிஸ்தானில் இஸ்லாமிய முறைப்படி நல்லதொரு அடக்கம்



செய்யமுடியாமல் போய்விட்டதால், ஏதாவது செய்து அவருக்குக் கபரிஸ்தானில் நல்லடக்கம் செய்யப்படவேண்டும் என்ற குழு உணர்வு தொற்றுநோய் போல அனைவருக்கும் பரவியது.

இதனைத் தொடர்ந்து உஸ்மான் சாகிப் பல அரசு அலுவலங்கள், காவல் நிலையம், என்று பல முறை நடையாய் நடந்து பிணத்தை தோண்டி எடுத்து முறையான அடக்கம் செய்வதற்கு அனுமதி பெற்றுவிடுகிறார். பிணநாற்றம் மூக்கில் அடித்ததை சகித்துக் கொண்டு, சவப்பெட்டியை உஸ்மான் சாகிபும் ஒரு கைபோட்டுத் துக்கிச் சென்றபோது எதிரே குடிபோதையில் திட்டிக்கொண்டே வந்த நிசாரைப் பார்த்ததும் முதலில் விரைத்துப்போனது உஸ்மான் சாகிப்தான். ஆனால், விஷயம் வெளியே தெரிந்தால் மானக்கேடு என்பதால் மௌனமாக அடக்கம் செய்துவிடுகின்றனர். அழுகி நாறியது இந்து பிணமா, யாருடைய பிணம் என்பது தீர்க்கப்படாதப் புதிர்களுள் ஒன்று.

உஸ்மான் சாகிபை ஆண்களின் முதலுருவாக இந்தச்சிறுகதையில் அழகாக ஆசிரியர் சித்தரித்துள்ளார். குடும்பத்தின் பெண்களிடம் கோபப்படுபவராவும்,

அவர் சார்ந்திருக்கும் குமுதாயத்தின் மதிப்பையும், அந்தஸ்தையும், அதிகாரத்தையும் விரும்புகிறவராகவும், சொத்தை சகோதிரிளுடன் பகிர்ந்துகொள்ள மனமில்லாதவராகவும், சமய நம்பிக்கையைத் தூக்கிப்பிடிப்பவராகவும் இருக்கிறார். நிறைவில், நிசாருக்கு மாண்புள்ள அடக்கத்தில் அவ்வளவு அக்கறையைக் காட்டி ஓர் அரசு அலுவலகத்திலிருந்து இன்னொரு அலுவலகம் என்று அலைந்த உஸ்மான் சாகிபிற்குத் தன் மகன் பதினைந்து நாட்களாக மூளைக்காய்சலில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பது தெரியாமல் போய்விடுவதில் முடிகிறது சிறுகதை.

உயிரோடு இருக்கும்போது ஒருவருக்குக் கிடைக்கிற மாலைகளைக் காட்டிலும் அதிகமாக இறந்த பிறகு கிடைக்கிறது என்பதே வாழ்க்கையின் எதார்த்தம். புரிந்துகொண்டவர்கள் இறப்பைத் தேடிப் பயணிக்கிறார்கள் புரியாதவர்கள் மாலைகளைத் தேடி அலைகிறார்கள்.

# மெக்சிகோவில் மழை, வெள்ளத்தில் சிக்கி 64 பேர் பரிதாப உயிரிழப்பு: 65 பேர் மாயம்!



மெக்சிகோவில் மழை, வெள்ளத்தில் சிக்கி 64 பேர் உயிரிழந்துள்ளனர். வட அமெரிக்காவில் அமைந்துள்ள மெக்சிகோ நாடு அருகே பசுபிக் கடலில் புயல் உருவாகியது. இந்த புயலுக்கு 'ரேமண்ட்' என பெயரிடப்பட்டது. இந்த புயல் காரணமாக மெக்சிகோவில் கனமழை கொட்டி தீர்த்தது. அந்நாட்டின் 32 மாகாணங்களிலும் கனமழை வெளுத்து வாங்கியது. தொடர் கனமழை காரணமாக, அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டது.

அதிலும் குறிப்பாக, அந்நாட்டின் குவாரடிரோ, ஹிடல்கோ, வெரகுரூஸ், சன் லுயிஸ் பொடொசி ஆகிய நகரங்கள் அதிக அளவிலான பாதிப்பை சந்தித்துள்ளன. காசோன்ஸ் ஆற்றின் கரையில் இருந்து வெளியேறிய தண்ணீரால் கார்கள் அடித்து செல்லப்பட்டன. நிலச்சரிவில் 1,000க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. மேலும், 59 மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகள், 308 பள்ளிகள் சேதம் அடைந்தன.

இந்த நிலையில், கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி மெக்சிகோவில் இதுவரை 64 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை வெள்ளத்தில் சிக்கி மாயமான 65 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான ராணுவத்தினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த பேரிடரைத் தொடர்ந்து, மெக்சிகோ அதிபர் கிளாடியா ஷீன்பாம் தலைமையிலான அரசு, அவசரகால மீட்புப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. ராணுவம், விமானப்படை மற்றும் தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 5,400க்கும் மேற்பட்ட வீரர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)

## காசா போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி 20 இஸ்ரேல் பணயக்கைதிகளை விடுவித்தது ஹமாஸ்

இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதை அடுத்து,ஹமாஸ் பிடியில் இருந்த 20 இஸ்ரேல் பணயக்கைதிகள் முதல் கட்டமாக விடுவிக்கப்பட்டனர். இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்புக்கும் இடையே சுமார் இரண்டு ஆண்டுகளாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில், அமெரிக்கா உட்பட பல்வேறு நாடுகள் தீவிர பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன. இதனைதொடரந்து இரு தரப்புக்கும் இடையே சமீபத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஹமாஸ் அமைப்பின் பிடியில் இருந்த முதல் கட்டமாக 7 இஸ்ரேல் பணயக்கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டனர். இந்த நிகழ்வுக்காக இஸ்ரேல் முழுவதும் உச்சக்கட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன.

ஹமாசிடம் இருந்து, உயிருடன் உள்ள 20 பேர் மற்றும் உயிரிழந்த 28 பேரின் உடல்கள் என மொத்தம் 48 பணயக்கைதிகள் விடுவிக்கப்பட உள்ளனர். இதற்குப் பதிலாக, போரின்போது காசாவில் இருந்து கைப்பற்றப்பட்டு குற்றச்சாட்டு இல்லாமல் தடுத்து வைக்கப்பட்ட 1700 பேர் தவிர, தீவிரவாத குழுக்களுடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றம்சாட்டப்பட்ட 250 பாலஸ்தீனக் கைதிகளை இஸ்ரேல் விடுவிக்கிறது. நேற்று முதல் கட்டமாக 7 பணயக்கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. காசா பகுதியில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் பணயக்கைதிகளை ஹமாஸ் அமைப்பு ஒப்படைத்தது.

பின்னர் அவர்கள் இஸ்ரேலிய ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் தெற்கு இஸ்ரேலில் உள்ள ரீம் ராணுவ தளத்திற்கு அவர்கள் கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்களுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்யப்பட்டு, நீண்ட நாட்களுக்குப் பிறகு தங்கள் குடும்பத்தினருடன் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பின்னர், மேல் சிகிச்சைக்காக டெல் அவிவ் மற்றும் ஜெருசலேமில் உள்ள மருத்துவமனைகளுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்படுவார்கள் என இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக விடுவிக்கப்படும் இஸ்ரேல் பணயக்கைதிகளை அழைத்து வருவதற்காக செஞ்சிலுவை சங்கம் சென்றதை அடுத்து அவர்களிடம் மீதமுள்ள 13 இஸ்ரேல் பணயக் கைதிகளை ஹமாஸ் ஒப்படைத்தது. மேலும் போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி இறந்த 28 பேரின் உடல்களையும் ஹமாஸ் ஒப்படைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் சரியான நேரம் தெரியவில்லை. டெல் அவிவ் சதுக்கத்தில் திரண்டு இருந்த பணயக்கைதிகளின் குடும்பத்தினரும், நண்பர்களும், செஞ்சிலுவை சங்கத்தினரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டதாக ஊடகங்களில் அறிவிக்கப்பட்டபோது மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தனர்.

இதேபோல் பாலஸ்தீன கைதிகளை ஏற்றிக்கொண்டு செஞ்சிலுவை சங்கத்தின் இரண்டு பேருந்துகள் ஒபர் சிறையில் இருந்து வெளியேறின. போர் ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக சுமார் 1900 பாலஸ்தீனிய கைதிகளை இஸ்ரேல் விடுவிக்க உள்ளது. இஸ்ரேலால் விடுவிக்கப்பட்ட பாலஸ்தீனியர்களை ஏற்றிச்சென்ற பேருந்துகள் காசாவின் தெற்கு நகரமான கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனைக்கு சென்றதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. மேலும் இஸ்ரேலால் விடுவிக்கப்பட்ட 154 பாலஸ்தீன கைதிகள் எகிப்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாக எகிப்து நாட்டை சேர்ந்த அதிகாரி தெரிவித்துள்ளார். இஸ்ரேலால் விடுவிக்கப்பட்ட 1900க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களில் இந்த கைதிகளும் அடங்குவர்.



டிரம்ப் முயற்சிக்கு ஆதரவு: பிரதமர் மோடி அறிவிப்பு

இஸ்ரேல், ஹமாஸ் போரை நிறுத்த டிரம்ப் எடுத்து வரும் முயற்சிக்கு பிரதமர் மோடி ஆதரவு தெரிவித்தார். இதுதொடர்பாக எக்ஸ் பதிவில்,' இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக சிறைபிடிக்கப்பட்ட பின்னர் அனைத்து பணயக்கைதிகளின் விடுதலையையும் நாங்கள் வரவேற்கிறோம். அவர்களின் விடுதலை அவர்களின் குடும்பங்களின் தைரியத்திற்கும்,அமெரிக்க அதிபர் டிரம்பின் அசைக்க முடியாத அமைதி முயற்சிகளுக்கும், பிரதமர் நெதன்யாகுவின் வலுவான உறுதிக்கும் ஒரு அஞ்சலியாக நிற்கிறது. அந்த பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்த டிரம்பின் நேர்மையான முயற்சிகளை நாங்கள் ஆதரிக்கிறோம்' என்று மோடி தெரிவித்துள்ளார்.

அதிபர் டிரம்ப் இஸ்ரேல், எகிப்து பயணம்

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்தத்தை தொடர்ந்து, அதிபர் டிரம்ப் இஸ்ரேல் புறப்பட்டுச்சென்றார். அவரை இஸ்ரேல் அதிபர் ஐசக் ஹெர்சாக் மற்றும் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆகியோர் ராணுவ இசைக்குழு இசைத்தப்படி வரவேற்றனர். இதனிடையே ஹமாஸால் விடுவிக்கப்பட்ட முதல் பணயக்கைதிகளின் வாகனங்கள் இஸ்ரேலுக்குள் சென்றன. அதிபர் டிரம்ப் பணயக்கைதிகளின் குடும்பத்தினரை சந்திக்க உள்ளார். பின்னர் இஸ்ரேல் நாடாளுமன்றத்தில் அதிபர் டிரம்ப் பேசினார். அவருக்கு எம்பிக்கள் பாராட்டு தெரிவித்தனர். தொடர்ந்து எகிப்து செல்லும் அதிபர் டிரம்ப், ஷார்ம் எல்-ஷேக் நகரில் நடைபெறும் அமைதி மாநாட்டில் பங்கேற்கிறார்.

உக்ரைன் போரை நிறுத்தாவிட்டால் டோமாஹாக் ஏவுகணை

ரஷ்யா உக்ரைன் உடனாக போரை விரைவில் நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரித்துள்ளார். இஸ்ரேல் சென்றபோது ஏர்போர்ஸ் ஒன் விமானத்தில் செய்தியாளர்களிடம் அதிபர் டிரம்ப் கூறுகையில், ஷ" உக்ரைன் உடனான போர் தீர்க்கப்படவில்லை என்றால் நான் உக்ரைனுக்கு டோமாஹாக் ஏவுகணைகளை அனுப்பப்போகிறேன். டோமாஹாக் நம்பமுடியாத அளவுக்கு மிகச்சிறந்த ஆயுத அமைப்பாகும். மிகவும் அதிகமாக தாக்கும் திறன் கொண்டது. நேர்மையாக சொன்னால் ரஷ்யாவிற்கு அது தேவையில்லைஷ" என்றார்.

டிரம்புக்கு விருது

இஸ்ரேல் மற்றும் எகிப்து நாடுகள் அதிபர் டிரம்ப் தங்களது நாடுகளின் மிக உயர்ந்த விருதை பெறுவார்என்று அறிவித்துள்ளன. (ஐ)

## யாழ். நூலகத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று மாலை இலங்கை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளனர். சுமார் 30 பேர் வரை வருகை தந்துள்ளதோடு இன்று குடாநாட்டின் பல இடங்களுக்கும் அவர்கள் பயணிக்கின்றனர்.

குடாநாட்டின் கரையோரக் கிராமங்களுக்கு இன்று பயணிக்கும் அவர்கள், நாளை நெடுந்தீவுக்கும் பயணிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## முதலமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அதற்கு மக்களின் அனுமதி கிடைக்கப் பெற்றால் நான் தயார்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் மேல் மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்குத் தயாரா என ஊடகங்கள் எழுப்பிய கேள்விக்குக் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடமாற்றங்கள் சரியான முறையில் வழங்கப்படவில்லை எனக் கூறியும் வடக்கு மாகாண ஆசிரியர்கள் நேற்று திங்கட்கிழமை முதல் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை இரண்டாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் நேரில் சென்று சந்தித்து ஆசிரியர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

ஆசிரியர்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்து தாம் வடக்கு மாகாண ஆளுநருடன் பேசி தீர்வுகளைப் பெற்று தருவதாக ஆசியர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதி அளித்தனர்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணைக்காக கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி கொழும்பு, புதுக்கடை நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட கனேமுல்ல சஞ்சீவ, சாட்சிக் கூண்டில் நின்ற போது, சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலை பாதாள உலகக் குழு உறுப்பினர் கெஹேல்பத்ர பத்மேயின் உத்தரவின் பேரில் முன்னெடுக்கப்பட்ட நிலையில், துப்பாக்கிதாரி உட்பட கொலைக்கு உதவி புரிந்த பலர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

எனினும், சட்டப் புத்தகத்துக்குள், மறைத்து வைத்து சமிந்து தில்ஷான் பியுமங்க கந்தனாராச்சி என்ற துப்பாக்கிதாரிக்கு, துப்பாக்கி ஒன்றை க் கொண்டு சென்று வழங்கியதாகக் கூறப்பட்ட இஷாரா செவ்வந்தி இதுவரை காலம் தலைமறைவாகியிருந்தார்.

இந்தநிலையில், அண்மையில், இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்ட கெஹேல்பத்ர பத்மே உள்ளிட்ட சந்தேகநபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில்,

இஷாரா செவ்வந்தி, நேபாளத்தின் காத்மண்டு நகரை அண்மித்த பகுதியில் தொடர்மாடி குடியிருப்பொன்றில் தங்கியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

கெஹேல்பத்ர பத்மேவுடன் செயற்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.கே.பாய் என்பவரின் உதவியுடன் இஷாரா செவ்வந்தி நாட்டிலிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கனேமுல்ல சஞ்சீவ கொலை செய்யப்பட்டு நான்கு நாட்களின் பின்னர், இஷாரா செவ்வந்தி இந்தியாவுக்குச் சென்றுள்ளதுடன், அங்கு மூன்று வாரங்கள் தங்கியிருந்துள்ளார்.

அதன் பின்னர் இந்தியாவிலிருந்து அவர் நேபாளத்திற்குச் சென்று தலைமறைவாகி இருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அத்துடன், இஷாரா செவ்வந்திக்காக கெஹேல்பத்ர பத்மே பல இலட்சம் ரூபா பணத்தை வழங்கியுள்ளார் என்ற தகவலும் வெளியாகியுள்ளது.

# பேருந்தை இயக்ககோரி மக்கள் ஆர்ப்பாட்டம்



ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் ரதல்ல குறுக்கு வீதியில் பேருந்துகளை இயக்குமாறு கோரி நானுஓயா சமர்செட் கார்லிபேக் தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டமானது திங்கட்கிழமை (13) அன்று ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா சமர்செட் கார்லிபேக் பகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பாக தெரிய வருகையில் ஹட்டன் - நுவரெலியா பிரதான வீதியில் ரதல்ல குறுக்கு வீதியில் ஊடாக நுவரெலியா செல்லும் வீதியில் கடந்த காலங்களில் இடம்பெற்ற பேருந்துகள் விபத்தின் காரணமாக இவ் வீதி ஊடாக பயணிக்கும் பேருந்து சேவை கடந்த மூன்று வருடங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இப்பிரதேச மக்கள் நுவரெலியா நகருக்கு செல்வதற்கு 5 முஅ தூரம் நடந்து சென்றே நானுஓயா சந்தியில் பேருந்தில் ஏறுகின்றனர். மறுபுறம் தலவாக்கலை நகருக்கு செல்ல 2 முஅ தூரம் நடந்து சென்றே ரதல்ல சந்தியில் பேருந்தில் ஏறுகின்றனர் .

இதனால் அங்குள்ள மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். பேருந்துகள் இவ் வீதி வழியே பயணிக்காமையால் இப்பிரதேச பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள், தனியார் அலுவலக ஊழியர்கள், ஏனைய தொழில்துறைக்கு செல்வோர் மற்றும் பொதுமக்கள் என அனைவரும் குறித்த நேரத்துக்கு பயணம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் 3500 மக்களை உள்ளடக்கிய இப்பிரதேசத்தில் இவ்வீதி வழியாக பேருந்து பயணிக்க தடை விதித்துள்ளமையால் பல்வேறு இன்னல்களை சந்தித்து வருவதாகவும் இவ்வீதி வழியாக பயணிக்கும் சொகுசு பேருந்துகள் நிறுத்தப்படாமை, முச்சக்கர வண்டிகளுக்கு அதிகம் பணம் வசூலிக்கின்ற காரணங்களால் மக்கள் பல்வேறு வகையில் பாதிக்கப்படுகின்றதா கவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே உடனடியாக அரசாங்கம் இவ்வீதியில் பேருந்து போக்குவரத்து சேவையை மீண்டும் வழங்குமாறு கோரி பிரதேச மக்கள் திங்கட்கிழமை (13) அன்று ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா கார்லிபேக் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். 100 இற்கும் அதிகமான கார்லிபேக் தோட்ட மக்கள் கோஷங்களை எழுப்பியும் சுலோகங்களை ஏந்தியவாறும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# வவுணதீவில் மீட்கப்பட்ட வெடிபொருட்கள் அழிப்பு

மட்டு. வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள கற்ப கேணி வயல் பிரதேசத்தில் மீட்கப்பட்ட மோட்டார் குண்டுகள் உட்பட்ட வெடி பொருட்களை செவ்வாய்க்கிழமை (14) அன்று நீதிமன்ற அனுமதி பெற்று விசேட அதிரடிப்படையின் வெடிக்கவைத்து அழித்துள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வயலில் சம்பவ தினம் ஞாயிற்றுக்கிழமை வேளாண்மை நடவடிக்கைக்காக வயலின் உரிமையாளர் உழவு இயந்திர மூலம் நிலத்தை பண்படுத்தும் போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த வெடி பொருட்களை கண்டு பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இதையடுத்து பொலிஸார் விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் படைப்பிரிவு வரவழைக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்த 5 மோட்டார் குண்டுகள் , ஒரு ஆர்.பி.ஜி. குண்டு, மற்றும் பிளாஸ்டிக் கான் ஒன்றில் ஆயுதங்களுக்கு பயன்படுத்தப்பட்ட தோட்டாக்களை மீட்டனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட வெடி பொருட்களை நீதிமன்ற உத்தரவு பெற்று விசேட அதிரடிப்படையினர் அந்த பகுதியில் வைத்து வெடிக்க வைத்து அழித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்

இதேவேளை குறித்த பிரதேசத்தில் கடந்த காலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மனித புதைகுழி அகழ்வில் தாமதம்

மழையுடனான வானிலை ஆரம்பமாகியுள்ள காரணத்தால் யாழ்ப்பாணம் - செம்மணி, மனித புதைகுழி அகழ்வுப் பணிகள் தாமதமாகக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தப்பட்டுள்ளது.

சித்துப்பாத்தி மனித புதைகுழி தொடர்பான வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில், நீதவான் கள விஜயத்தை மேற்கொண்டார்.

இதன்போது மனித புதைகுழி காணப்படும் பகுதி சதுப்பு நிலமாக உள்ளதை நீதவான் அவதானித்துள்ளார்.

இந்த நிலையில், வழக்கை எதிர்வரும் நவம்பர் மாதம் 03 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

# சீன ஜனாதிபதியை பிரதமர் சந்தித்தார்



பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இடையேயான அதிகாரப்பூர்வ சந்திப்பு செவ்வாய்க்கிழமை (14) அன்று பெய்ஜிங்கில் உள்ள மக்கள் மண்டபத்தில் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக-பொருளாதார, கடல்சார் மற்றும் பிற பலதரப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவுபடுத்துதல், பெல்ட் அண்ட் ரோடு முன்முயற்சியின் கீழ் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துதல் மற்றும் முக்கிய வளர்ச்சி கூட்டாண்மைகளுடன் முன்னேறுதல் உள்ளிட்ட பல விஷயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (ஐ)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.10.2025 வெளியிடப்பெற்றது.